NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 17 November 2022

# புகழ்பெற்ற 20 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் முதல்முறையாக ‘என்யுஎஸ்’

சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகம் (என்யுஎஸ்) முதல்முறையாக உலகின் புகழ்பெற்ற 20 பல்கலைக்கழகங்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ளது. நேற்று வெளியான ‘டைம்ஸ் உலகப் புகழ்பெற்ற உயர்கல்வி நிலையங்கள்’ பட்டியலில் ‘என்யுஎஸ்’ 19வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக அது 24வது இடத்தில் இருந்தது. அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

Source: Tamil Murasu © SPH Media Limited. Permission required for reproduction.